<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

முன்னிலை – திரு. எம். விக்னேஷ் பிரபு, எம்.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 12ம் நாள் வியாழக்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.268/2025</u>**

CNR.No.TNTM04–000711–2025

சூர்யகுமார் . . . வாதி

// எதிர் //

1. சுகுமார்,
2. ரவி, . . . பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 11.03.2026ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.அசோக் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாத காரணத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரையை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>தீர்ப்புரை</u>**

தாவா வாதிக்கு சேர வேண்டிய தாவா தொகையான ரூ.1,69,066/–ம் மற்றும் அசல் தொகை ரூ.1,00,000/–க்கு பின்வட்டியும் கோர்ட் செலவும் வாதிக்கு பிரதிவாதிகள் கொடுக்கும்படி தீர்ப்பளிக்கக்கோரி வாதியால் வழக்கு தாக்கல்.

2. **<u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>**

பிரதிவாதிகள் வாதியிடமிருந்து கடந்த 09.01.2023ம் தேதியில்

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.12 13:15:43 +0530

ரூ.1,00,000/– அவரது குடும்ப செலவிற்காக கடனாக பெற்றுக்கொண்டு அதற்கு ஈடாக வாதி பெயருக்கு பிரதிவாதிகள் தாவா பாண்டினை சரியான பிரதிபிரயோஜனத்துடன் கொடுக்கவேண்டிய தொகை ரூ.1,00,000/–க்கு 24% வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு வாதி பெயருக்கு அல்லது வாதியின் உத்தரவு பெற்றவருக்காவது கொடுப்பதாக ஒப்புக்கொண்டு ரூ.1,00,000/– த்திற்கு அதே தேதியில் பிராம்சரி நோட்டினை வாதி பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், வாதியிடம் பிரதிவாதிகள் கடன் தொகை பெற்றது குறித்து பல முறை சென்று வாதி திருப்பி கேட்டும் பிரதிவாதிகள் பணம் கொடுக்கவில்லை என்றும், எனவே வாதி தாவா அண்டி பாண்டுத்தொகையை நாளது தேதி வரைக்குண்டான வட்டியுடன் திரும்ப செலுத்துமாறு பிரதிவாதிகளுக்கு 06.10.2025ல் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பினை அனுப்பினார் என்றும், அந்த அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டும், இதுநாள் வரையில் அண்டிபாண்டுதொகையை பைசல் செய்யவில்லை என்றும், எனவே வாதிக்கு சேர வேண்டிய தாவா தொகையான ரூ.1,69,066/–யினை பிரதிவாதிகளிடமிருந்து வசூலித்து தரும்படி தாவா தாக்கல்.

3. பிரதிவாதிகள் தரப்பிற்கு போதிய வாய்ப்புக்கள் வழங்கியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததாலும், இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 05.01.2026–ம் தேதியன்று பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. வாதி தரப்பில் வாதி திரு.சூர்யகுமார் அவர்கள் வா.சா.1 ஆகவும், திரு.தினேஷ்குமார் அவர்கள் வா.சா.2ஆகவும் விசாரிக்கப்பட்டு வா.சா.1–ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.12 13:15:51 +0530

செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணசாட்சியங்கள் இல்லை.

5. இவ்வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாகும்.

6. வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1, வா.சா.2ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிருபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை அனுமதித்து தீர்ப்பளிக்குமாறு வாதிட்டார்.

7. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது, ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாவில் கண்டுள்ள தொகையினை அசல் வட்டியுடன் திருப்பி செலுத்தும்படிக்கு தீர்ப்பளிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா பாண்டானது 09.01.2023 அன்று ஏற்பட்டுள்ளது. வாதி இத்தாவாவினை 27.11.2025அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த வகையில் வாதியின் இத்தாவாவானது காலாவதிதோஷத்தால் பாதிக்கப்படவில்லை. தாவா பாண்டில் 09.01.2023 தேதியன்று வாதியிடம் பிரதிவாதிகள் ரூ.1,00,000/- குடும்பச்செலவிற்காக கடன் வாங்கியதாக உள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, வாதியான வா.சா.1, வா.சா.2ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டினை நன்கு பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது 09.01.2023 தேதியன்று ரூ.1,00,000/-ம், வாதியிடம் பிரதிவாதிகள் குடும்பச்செலவிற்காக கடன் பெற்றுக்கொண்டு அதற்கு மறுபயனாக வாதிக்கு பிரதிவாதிகள் தாவா பாண்டினை எழுதிக்கொடுத்துள்ளார் என்பது மிகத்தெளிவாக தெரியவருகிறது.



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.12 13:15:56 +0530

வாதி தாக்கல் செய்துள்ள தாவாவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யவில்லை. மாறாக பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள். வாதியான வா.சா.1 தனது வழக்குரையை ஒத்துரைத்தே முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார்.

8. வாதியிடம் பிரதிவாதிகள் சரியான பிரதிபிரயோஜனத்துடன் கொடுக்க வேண்டிய தொகைக்காக ரூ.1,00,000/—க்கு வா.சா.ஆ.1 பிராமிசரி நோட்டினை வாதிக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், தாவாவில் கண்ட தொகையினை அசல் வட்டியுடன் செலுத்தாததால் வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக இத்தாவாவினை தாக்கல் செய்துள்ளார் என்பது மிகத்தெளிவாக நிரூபணமாகிறது. வாதி தனது தாவாவில் தெரிவித்துள்ள சங்கதிகளை வா.சா.1 மற்றும் வா.சா.2ன் சாட்சியம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிருபித்துள்ளதால் தாவாவில் கண்ட தொகையை அசல் வட்டியுடன் வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த கடமைப்பட்டவர் ஆவார். எனவே வாதி தாவாவில் கோரியுள்ளபடி பிரதிவாதிகள் வாதிக்கு தாவா தொகை ரூ.1,69,066/—ம் செலுத்த வேண்டும் என்றும், அசல் தொகை ரூ.1,00,000/—க்கு வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தீர்ப்பான நாள் வரை 12% வட்டியும், தீர்ப்பிற்கு பின்னிட்டு வசூலாகும் நாள்வரை 6% வட்டியும் செலுத்த வேண்டுமென்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, வாதி தாக்கல் செய்துள்ள இத்தாவாவானது செலவுத்தொகையுடன் அனுமதித்து பிரதிவாதிகள் வாதிக்கு தாவா தொகை ரூ.1,69,066/—ம் செலுத்த வேண்டும் என்றும், அசல் தொகை ரூ.1,00,000/—க்கு

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.02.12 13:16:02 +0530

வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தீர்ப்பாணை நாள்வரை 12% வட்டியும், தீர்ப்பிற்கு பின்னிட்டு, வசூலாகும் நாள்வரை 6% வட்டியுடன் செலுத்தவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு மார்ச் 12–ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.02.12 13:16:06 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

<u>வாதி தரப்பு சாட்சி</u> :

வா.சா.1 – திரு.சூர்யகுமார், த/பெ.பிரகாஷ்
வா.சா.2 – திரு.தினேஷ்குமார், த/பெ.அண்ணாதுரை

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u> :

| | | |
|---|---|---|
| 1. வா.சா.ஆ.1 | 09.01.2023 | பிரதிவாதிகள் வாதிக்கு எழுதிக்கொடுத்த அண்டிபாண்டு அசல். |
| 2. வா.சா.ஆ.2 | 06.10.2025 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| 3. வா.சா.ஆ.3 | – | அஞ்சலக ஒப்புகை அட்டை(எண்ணிக்கை –2) |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்ள்</u> : இல்லை.**

M VIGNESH PRABU Digitally signed by M VIGNESH PRABU Date: 2026.02.12 13:16:12 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.